
வைகாசி – ஆனி
2011

# நீங்களும் எழுதலாம்

நீங்கள் – 04 எழுத்து –20

20



தடைகளைத் தகர்த்து
தகவுகளைத்தேடி

இருமாத கவிதை இதழ்

NEENKALUM EZHUTHALAM
(Poetry Magazine)

விலை 25/=

# நீங்களும் எழுதலாம் - 20

## மே - ஜூன்

ஆசிரியர்
எஸ்.ஆர். தனபாலசிங்கம்

**படைப்பாளிகள்**

| | |
|---|---|
| எஸ்.முத்துமீரான் | வேல்நந்தன் |
| கலா விஸ்வநாதன் | ஏ.இக்பால் |
| சத்தியமலரவன் | என்.சந்திரசேகரன் |
| ஷெல்லிதாசன் | ஏறாவூர்தாஹிர் |
| திவித்துறை தர்ஷி | ஜெ.சரண்யா |
| எம். ரொக்ஷா | சூசை எட்வேட் |
| ச.மணிசேகரன் | எஸ்.எம்.இர்பான் |
| ஐ.சாரங்கன் | தி.நிரோஷன் |
| நா.ஆன்கியூரின் | இஸ்மாயில்லெவ்வை |
| பெ.பத்மபிரஷன | தி. பவித்ரன். |
| எஸ்.ஆர்.தனபாலசிங்கம் | |


➢ பேராசிரியர் கா. சிவத்தம்பி அஞ்சலி நிகழ்வு நிழற்படங்கள்

➢ கருத்தாடற்களம்- தாமரைத்தீவான்

➢ நூல் அறிமுகக் குறிப்புக்கள் -
"ஒருவாசகனின் பிரதிகள்"
"ஈழத்துக்லை இலக்கிய உலகு"
-"கருத்துக்கலசம்"

➢ சிற்றிதழ் சேகரிப்பாளர் - க. பட்டாபிராமன்

➢ வாசகர் கடிதம்

➢ மூலமும் பெயர்ப்பும் - சி.சிவசேகரம்

வடிவமைப்பு : க. தீபகாந்தன்
அட்டைப்படம் : ஓவியர் கே. சிறிதரன்

**தொடர்புகளுக்கு**
**'நீங்களும் எழுதலாம்'**
**103/1, திருமால் வீதி, திருகோணமலை**
**தொ. இல. : 0778812912**
**026 7915836 / 0262220398**
E-mail : neenkal@yahoo.com



## பேராசிரியர் கா. சிவத்தம்பி



மார்க்சிய சிந்தனைப் புலத்தில் நின்று கொண்டு, மறைந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் தமிழியல், சமூகவியல், மானிடவியல், வரலாறு, அரசியல், உளவியல் என ஆற்றிய துறைசார் பங்களிப்புகள் ஆழ்ந்தகன்றன. பல்துறை அறிவுடன் தமிழ்ச்சூழலில் தீவிர தாக்கத்தை ஏற்படுத்தியவர்.

இலங்கைத் தமிழர் யார் எவர்? யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு, தமிழில் இலக்கிய வரலாறு, இலக்கணமும் சமூகஉறவுகளும் , மதமும் கவிதையும் , தமிழ் கற்பித்தலின் உன்னதம், பண்டைத் தமிழ்ச் சமூகம் உள்ளிட்ட பல நூல்களையும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியவர். மார்க்சிய விமர்சன முறையை பேராசிரியர் க. கைலாசபதி அவர்களுடன் இணைந்து முன்னெடுத்துச் சென்று தமிழகத்துக்கே முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர். மிகப்பெரிய ஆய்வுகளை நிகழ்த்தி, பழந்தமிழ் இலக்கியங்களின் சிறப்பை உலகுக்கு நிறுவியவர். உலக வரலாற்றில் தமிழுக்கு சிறந்த ஸ்தானத்தை தேடித்தந்தவர். இத்தகைய புலமையாளரின் இழப்பு தமிழ் கூறும் நல்லுலகிற்குப் பேரிழப்பே. அன்னாருக்கு எமது ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

***********

# மார்க்கமும் நோக்கமும்

நவீன உலகியல் வசதிகள் எம்மை குறிக்கோளற்ற வாழ்வியல் முறைமைக்கு தள்ளிக் கொண்டிருக்கின்றன. உண்பதும் உடுப்பதும் உறங்குவதும் வாழ்வாகிப்போன நுகர்வுச் சமுதாயமாக எல்லாம் மாறி வருகின்றது.

வசதி படைத்தவர்கள் கைவசம் உள்ள அனைத்தும் தங்களுக்கும் கிடைக்கும் என்ற அங்கலாய்ப்பில், அடிப்படைச்சமன்பாட்டை மறந்து பணம் தேடி ஆலாய்ப்பறந்து கொண்டிருக்கின்றனர் பலர். இந்த நச்சுவட்டத்தை உடைத்தெறிவது எப்படி? சிலர் தனிமனிதர்களாகப் புலம்பிக் கொண்டிருக்க காலம் தன்பாட்டில் நகர்ந்து கொண்டிருக்கிறது. இந்தத் தனிமனிதப் புலம்பல்காரர்களும் செய்வதற்கு ஏதுமற்றுப் பயணிப்பவர்கள்தான். நோக்கத்தை அடைய ஒரு மார்க்கத்தில் ஒன்றுபட்டுப் பயணிப்பது அவசியம். 19ம் நூற்றாண்டில் ஜேர்மானிய சோசலிஸ கவிஞராகிய லசாலியின் கவிதை ஒன்றை நினைவூட்டுவது இங்கு பொருத்தமென நினைக்கின்றேன்.

மார்க்கத்தைக் காட்டாமல் நோக்கத்தைக்
காட்டாதீர்
நோக்கமொடு மார்க்கங்கள் பிணைந்துறுதல்
இயல்பதனால்
ஒன்றினை நீர் மாற்றுவதால் மற்றதையும்
மாற்றிடுவீர்
வெவ்வேறு மார்க்கத்தால் வேறுபட்ட
பயன் விளையும்

வருங்காலத் தலைமுறையினரை போலி வாழ்க்கை முறைமையிலிருந்தும், பொய்மைச் சகதியிலிருந்தும் மீட்டெடுக்கக்கூடிய தகுதி படைப்பாளிகளுக்கே உண்டு. ஏனெனில் எழுத்தை பணம் பண்ணும் வழியாகக் கொள்ளாதவர்கள், குறிப்பாக ஈழத்துப் படைப்பாளிகளே. அந்த வகையில் பெரும்பணி என்பது நம் முன்னே எதிர்நோக்கி நிற்கிறது. கவிதை ஆயுதமாக....
நீங்களும் எழுதலாம்

**அன்புடன் ஆசிரியர்**



# எங்கள் கடவுள்

நான் அழிவில்லாதவன்.
என் ஆத்மா மரணத்தை வென்றது.
என்றெல்லாம் கூறிய எங்கள் கடவுள்,
எங்கள் எல்லோரையும் ஏமாற்றிவிட்டு
மரக்கட்டையாகக் கிடக்கிறார்.
எங்களையெல்லாம் மோட்சத்திற்கு
அழைத்துப் போவதாக வாக்குறுதியளித்தவர்
மோட்சத்தின் திறப்புக்களைத் தராமலே
மரணமடைந்து விட்டார்.
கடவுளின் வாக்குறுதிகளை,
மலைபோல் நம்பி, கடன்வாங்கி,
கட்டுக் கட்டாகப் பணத்தையும்,
தங்கம், வெள்ளிகளையும், காணிக்கையாக
அள்ளி அள்ளிக் கொடுத்த நாங்கள்
மோட்சத்தின் திறப்புகளைக் காணாமல்,
அநாதைகளாகி அழுது கொண்டிருக்கிறோம்.
மோட்சத்திற்கு போகப் பந்தம் கொடுத்த
எங்கள் செல்வங்களெல்லாம்
கடவுளின் பூட்டிய அறைகளில் கிடந்து,
புழுங்கிக் கிடக்கின்றன.
கடவுள், பதுக்கி வைத்த செல்வங்களை
அள்ளிப் போக,
அரச படைகள் வந்துவிட்டன.
எங்கள் மோட்சத்தின் கனவுகள்,
சூனிய வெளியில் கருக்கட்டி,
அடைகாக்கின்றன.
கடவுளின் கட்டையை எரிப்பதா
அல்லது புதைப்பதா என்பதில் போட்டி.
ஐயோ பாவம்!
மோட்சத்திற்கு குறுக்கு வழியில் போக,
பந்தம் கொடுத்த நாங்கள்,
கடன் கொடுத்த
வட்டிக்காரனை நினைத்து நினைத்து,
பயந்து பயந்து அழுது கொண்டிருக்கிறோம்.
மோட்சத்தின் திறப்புகளை கடவுள்
எங்கு ஒழித்து வைத்திருக்கிறாரோ?

எம். முத்துமீரான்-
நிந்தவூர்

# நடிக்கத் தெரியவில்லை

என்னால்
உன்னைப்போல்
நடிக்கத் தெரியவில்லை!
வேளைக்கு ஒரு சிரிப்பும்
உள் ஒன்று வைத்து
உதட்டிலே வார்த்தைகளும்
எல்லாமே நான்தான்
என்ற அகங்காரமும்
எப்படி உன்னால் மட்டும்
இப்படி முடிகிறது
என்னால் முடியவில்லை!
வேசம் போடும் உன்னைப்போன்ற
பாசமில்லாப் பரதேசிகளே
வெற்றி பெற - வேதனையில்
துடிக்கிறது மனம்!
தனக்குத்தானே முடிசூடல்கள்
தனக்குத்தானே பாராட்டுக்கள்
அடுத்த கணத்தில்
பிணமாய் சாம்பலாய்
கரைந்திடும் வாழ்விற்குள்
எதற்காக இந்தத் திருக்கூத்துக்கள்
வாழத் தெரியாதவன்
என்று நீ என்னை
வசைபாடலாம்
உன் பார்வையில்
நடிப்பது தான்
"வாழத் தெரிதல்" என்றால்
நான் ஒன்றும் பச்சோந்தியல்ல
மனிதன்
அதனால்த்தான் சொல்கிறேன்
என்னால் உன்னைப்போல்
நடிக்கத் தெரியவில்லை!

- புலோலியூர் வேல்நந்தன் -

கவிதைக்கான..........
பயில்களம்
பரிசோதனைக்களம்
காத்திரத்தின்களம்
கருத்தாடற்களம்
விளக்கக்களம்
விமர்சனக்களம்

நீங்களும் எழுதலாம்



# ஆத்ம சுகம்

மனம் ஆசை வனம்
ஒழுங்கிலும்
ஒழுங்கை மீறியும்
எண்ணங்கள்
மூடிக்கிடக்கும் காடு

புத்தி விரசும் சிரசில்
தெளிவாய் சுடர்விடும்
சூரியப்புள்ளி

பஞ்சப் பூதங்களின்
படைப்பு உடம்பு
உடம்பில் உயிரோட்டமான
சுவாசம் ஆத்மா
செய்வினைப்படி
அனுபவம் சேகரிக்கும்

தேகக் கூட்டுக்குள்
ஆசை நுழையும்
வாயில்கள்
ஐம்புலன்கள்

முக்கோணமாய்
மனம், புத்தி, ஆத்மா

தீதை நீக்கி,
நன்றினை நாடும்
புத்தியின் போக்கில்
மனம் இயங்க
ஆத்ம சுகம்
அமைதியாய் முளைவிடும்

- கலா விஸ்வநாதன் -

******************************

கடிதவழி தனி இதழைப் பெற விரும்புவோர் 5/= பெறுமதியான 7 முத்திரைகள் அனுப்பவும். வருட சந்தா200/= (தபாற் செலவு உட்பட ) அனுப்பவேண்டிய தபாலகம் திருகோணமலை முகவரி எஸ். ஆர். தனபாலசிங்கம் 103 / 1 திருமால் வீதி , திருகோணமலை

## கவிஞர் ஏ. இக்பால் கவிதைகள் இரண்டு

# புதுச் சமூகத்தை ஆக்கும் இலக்கியம்

சமூகத்தை உருவாக்கும் இலக்கியம்
அதன் கர்த்தாவால் பணம் பெற்றுப்
பணக்காரக் கும்பலை உயர்த்துதே!

இலட்சிய எழுத்தினை உருவாக்கும்
இலக்கியக் காரனை முழுமையாய்
அலட்சியம் செய்யாது குடும்பத்தைப்
பலமுடைப் பக்குவம் பெற்றிடச்
செல்வ மளித்துக் காத்திடும்
சிறப்புடை மனிதனே புரவலன்!

சடையப்ப வள்ளல், புரவலன்!
சீதக்காதி புரவலன்!
கம்பராமாயணம் படைத்திட்ட
காலத்துள் கம்பனின் குடும்பத்தைச்
சிந்தையில் ஏற்றியே சிறப்பித்த
செல்வம் படைத்தவன் சடையப்பன்!
சீறாப்புராணம் இயற்றிடும்
சீரான காலத்துள் உமர் புலவனின்
பேரான குடும்பத்தைக் காத்திடச்
செல்வம் குவித்தவன் சீதக்காதியே!

இன்றை இலட்சியப் படைப்பாளன்
இயற்றிய இலக்கியம் பெற்றிட
நன்றெனச் சிறுதொகை கொடுப்பவன்
நாட்டினில் புரவல னாகிறான்!
புதுச் சமூகத்தை உருவாக்கும் இலக்கியம்
புதுமாதிரிச் செல்வதைப் பார்க்கலாம்.

---

★ **கவிதை சம்பந்தமான குறிப்புக்கள், கட்டுரைகள் விமர்சனங்கள் போன்ற பல்வேறு விடயங்களோடு மொழி பெயர்ப்புப் கவிதைகளும் உங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.**

★ **அறிமுகக் குறிப்பில் உங்களது கவிதைத் தொகுப்பு இடம்பெற வேண்டுமாயின் ஒரு பிரதியை அனுப்பி வையுங்கள். 2009 ற்கு முன் வெளியானவை அறிமுகக் குறிப்பில் இடம்பெற மாட்டாது.**



# உலக மாற்றம்

உலகச் சமூக மக்களோ எழுநூறு கோடி!
விண்ணைத் தொடுகின்ற விஞ்ஞானவளர்ச்சி!
விண்வெளி ஆய்வில் பொருளெல்லாம்
வீழ்ச்சி!
ஒட்டுக் கேட்டுப் பணத்தை பெருக்கி
நூற்றறுபத்தெட்டு வருடங்கள்
உலகில் வாழ்ந்த நாளேடொன்று
ஒரு நொடிக்குள்ளே உலகுறவைத்
துறந்தது!
செல்லிடத் தொலைபேசியினாலே
ஒழுக்கம் குன்றி இளசுகள் வீழ்ச்சி!
அணு உலை உருவாக்கிய பெருமையில்
உழன்றவர் இயற்கை அழிவின்போது
அதை மாற்றிடமுடியா தல்லலுறுகிறார்

கற்பதற்காகக் கற்பை ஈடுவைப்பதற்காக
பணம் பெற ஏலம் போடும் இளமங்கை!
கௌரவமானோர் செல்வம் பெருக்க
மோசடி செய்து வலையில் சிக்கல்!
உயர்பதவி வகிப்போர் பாலியல் தொல்லை
உலகமெல்லாம் வெட்கக் கேடெனக்
கண்டோம்!

எப்படி உலகச் சமூக மாற்றம்?
எவ்விதம் இலக்கியம் எழுந்திடும் தேட்டம்?
அல்லல் படும் உலகச் சமூக நிலைமை!
இவ்விதமானதென் காரணமென்ன
தேடியுணர்ந்துடன் உலகச்
சிறப்பினைக் கண்டு
சமூக மாற்ற இலக்கியம் படைப்போம்.!

ஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒ

**"நீங்களும் எழுதலாம்"** கிடைக்குமிடங்கள்
பூபாலசிங்கம் புத்தகசாலை,கொழும்பு -11
பூபாலசிங்கம், வெள்ளவத்தை, கொழும்பு-06,
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்,
புக்லாப் புத்தகசாலை, யாழ் பல்கலைக்கழக அருகாமை,
ப.நோ.கூ சங்கம், கட்டைவேலி, கரவெட்டி, நெல்லியடி,
கவிதா ஸ்டோர், இல.05,வவுனியா.

# நகரின் ஒதுக்குப்புறம்

குருட்டு இரவொன்றில்
என்கால்கள் நகரத்தை நோக்கி நகர்ந்தன
இருவர் வெளிச்சத்தூண்களின் கீழ்
புகையிலமர்ந்திருந்தனர்
அவர்களுக்கு நடுவில் சில மதுப்போத்தல்கள்
அவர்களுக்கருகில் குட்டை நாயொன்று
முதிர்ச்சியைக் காட்டிக்கொண்டிருந்தது
சேரி இருளில் மின்னிக்கிடந்தது
தெருவில் ஓயாமல் ஓடும் சத்தமிட்ட வாகனங்கள்
இரவின் இருளில்
ஒரு பெண்ணுடன் இரு ஆண்கள்
பேரம் பேசுகின்றனர்
ஒரு பகிந்தலொன்றைப்பற்றி
இருள் இப்போது
இன்னொரு கம்பளத்தைப் போர்த்தியது
பிறகு சில தாள்களை ஒருவர் கொடுக்க
மூவரும் இருளின் வழி நடக்கின்றனர்
காற்று வீசவில்லை
மேனி புழுங்க
உடைகள் பாரமேறியதாக நினைத்து
அதனைக் கழற்றி வீசினர் இருவர்
பூமி ஆதிவாசிகளை
வழியில் கொண்டுவந்து சேர்த்திருந்தது
தரகனொருவன்
தனது செலவழித்த நேரத்தைக்
கணக்குப்பார்க்கிறான்

- சத்தியமலரவன் -

## காலத்துயர்

"......................
விழுதுவிட்டுக் கிளையெறிந்து
வேர் கொண்ட வாழ்வு
வேறுவேறாய்ப் பெயர
இருப்பிழந்தார்
இப்போது
எந்தக்காடோ கரம்பையோ
முள்விளையும் பாலையோ
போக்கறியா வாழ்வின்
பொறிதளத்தை நோக்கியோ
போகின்றார்
அவரின் உளப்பொருமலை ஆரறிவார்?

க — வில்வரெத்தினம்
நன்றி — "காலத்துயர்"



# புதிய படைகள்

தேயிலைக்கடியில் ......
தேகம் புதை(த்)ந்து
பரம்பரையாய் பசளைகளான
பரிதாபத்திற்குரிய
படுபாவங்களை அல்ல - இப்போ
பட்டங்கள் பெறவே
துடியாய் இருக்கும்
சுறுசுறுப்பான கூட்டம்

சரித்திரத்தில் ......
சகவாழ்விற்காய் ...... ஒரு
யுகவாழ்விற்காய்
சங்கங்கள் எல்லாம்
சலித்த போதும் - இதுவரை
சங்கத்திற்காய் சலிக்காதவர்கள்

நிஜமாய் ......
எஜமானர்களால்
ஏமாற்றப்பட்டாலும்
புஜங்களை உயர்த்தாத
எல்லாவற்றிலும்......
எஜமானிய விசுவாசம்
கொண்டவர்களாய் இருந்த
கொடுமை அகற்ற
குறிக்கோளுடன்
பட்டினியாய் இருந்தாலும்
படிப்பை தொடரும் - புதிய
படைகள் நாம்
புறப்பட்டு இருக்கிறோம்

என். சந்திரசேகரன்
(இறத்தோட்டை)

## உயிர்ப்பு

"...............................
பளிங்கென்ன வெள்ளை முறுவலுடன்
ஒன்றும் நிகழாப் பாவனையில்
பாசாங்காய்
நிமிர்ந்துள்ள நூலகமும் சாம்பலிலே
உயிர்த்ததெனின்
தீக்கொண்ட நூலனைத்தும் உயிர்திரும்பல்
எப்போது?
கரை கடந்த வாசகர்கள்
கரை மீள்வதெப்போது

சி.சிவசேகரம் -
நன்றி. "இன்னொன்றைப் பற்றி"

நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மறைந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு 10.07.2011ல் தி/புனித பிரான்சிஸ் சவேரியர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்



தலைமை
எஸ். ஆர். தனபாலசிங்கம்



நந்தினி சேவியர்





Dr. இராஜ.தர்மராஜா



ஷெல்லிதாசன்



திருமதி. ராணி சீதரன்

# எழுதுகோலின் இரத்தக் கண்ணீர்

தேகாங் கனத்துப் போனாலும்
தலைகனத்துப் போகாத
தங்கத் தமிழ் மகன்!

வடமராச்சியான் என்றாலும்
வடக்குக் கிழக்கில் மட்டுமல்ல
எட்டுத்திசைகளையும்
தனது ஆளுமையால்
இறுகப்பற்றிக்கொண்ட இமயம்!

வித்துவப் பிழைப்பைவிட
தத்துவப் பிழைப்பில்
தனி நாட்டங்கொண்ட
தனி நாயகன்
எங்கள் காசி!
காசுக்கு விலைபோகா
கண்ணியன்
பேசுவதற்கு மட்டுமே
மாக்சியத்தை
பலமாக வரித்தவனல்லன்!

நாசி வழி சென்ற
மூச்சுக் காற்றுக்கூட
அந்த அரிய தத்துவத்தைத்தான்
அவனது இதயத்துக்கு எடுத்துச்சென்றது!

அயல்நாட்டு வித்துவங்களையும்
விஞ்சியெழுந்த
கைலாசபதியென்னும்
மேருமலைக்குப் பக்கத்துணையாய்
பட்டொளிஇடைவீசிய
பழுத்த செம்பரிதி!

ஏற்றத்தாழ்வுகள்
இனமுரண்பாடுகள்
மாற்றத்தாலேயே மறையுமென
மனந்திறந்துரைத்த
மகா ஞானி!

துறைதோய்ந்த விற்பன்னா
துயில்கொண்டாய் இன்று
புயலடித்த சோகமாய்
புலம்புகிறது அறிவுலகம்!

கைபிடித்த உன்பேனா
கலங்கி அழுகிறது - தன்
மெய்பிடித்து எழுதிய - மா
மேதையை தொலைத்ததினால்!

- ஷெல்லிதாசன் -

சிவத்தம்பி அஞ்சலிநிகழ்வில்
வாசிக்கப்பட்ட அஞ்சலிக் கவிதை-



# நீயும், உன் சட்டையும்!

நான், உன்
இதயம் பேசுகிறேன்! உன்,
பிரயாசைகள் யாவும்
பயனற்றனவாய்...
பிசு, பிசுத்து விட்டனவே! உன்,
விடா முயற்சிகளெல்லாம்
விழலுக்கிறைத்த நீராய்...
வீணாகி விட்டனவே!
நீ விரும்பி, அணிந்து மனம்கனிந்த அந்த
அழகிய பூச்சட்டையுடன், அந்தோ
விதி விளையாடி விட்டதே!
அதன் பொத்தான்கள்
அறுந்து விழுந்த போதெல்லாம்...
மாற்றீடாக,
ஒவ்வொன்றாய் கட்டி அணிந்தாய்!
கிழிசல்கள் நிகழ்ந்த போதெல்லாம்...
வீச மனமின்றி, பீத்தல்களை

தைத்துத் தைத்தணிந்து
தனியொரு சுகம் கொண்டாய்! ஆக,
அந்த சட்டையை அணிதலில்
நீ கண்ட ஆத்ம திருப்தியை
ஆண்டவனும் அறிவான்!
நானும் உணரந்தேன்!

காலச் சுழற்சியில்...
கழன்று, கழன்று விழுந்த
பொத்தான்களுக்குப் பதிலாக,
கிழிந்து, கிழிந்து தொங்கிய
கிழிசல்களைத் தைத்தணிய...
மூச்சிரைக்க முயற்சித்தும், உன்னால்
முடியாமல் போய்விட்டது!

இன்று, நீயொரு
சட்டை அணியாத துறவி!
சட்டை அணிதலைப்பற்றி
சட்டை செய்யாத பிறவி!
ஆனால்...
முற்றும் துறந்தவனாக அல்லன்!
உலகப்பற்றில்,
சொட்டும் குறையாதவனாக!

-ஏறாவூர் தாஹிர்-

# சிறந்தது எது?

நியாயங்கள் நீதியற்று
எதிரெதிர் திசைகளில்
நடமாடும் காலம் !

உண்மையின் மதிப்பு
இப்போது
பொய்களுக்கே பெரும்பாலும்

போலிகளும்
மாயங்களும்
அனைத்திற்குள்ளும்
ஊடுருவி
அப்பி விட்ட நிலையில்!

அக மனதிற்குள்
கலப்பட முறையில்
கபடத் தனமும்
நயவஞ்சக சூழ்ச்சியும் !

மனசாட்சி புறமொதுங்கி
பொய்சாட்சி மேலெழும்பி
வெற்றிக் கம்பங்களுடன்!

புன்னகை கூட
பல்வேறு
உப தலைப்புக்களுடன்
பிரிகிறது!

மேலுதட்டில்
தேன் சுரக்கும் வார்த்தைகளும்
நெஞ்சடியில்
நஞ்சு கலந்த எண்ணங்களுமே!

உலகத்தோடு
ஒத்துப் போக
நினைத்து!
நபர்களின் நடவடிக்கைகளை
தெரிந்துக் கொள்ள
எடுத்த முயற்சியில்
கிடைத்த பெறுபேறு

ஒத்துபோவதை விட
தனித்து விடுவதே
சிறந்தது!

– திவித்துறை தர்ஷி –

பயில்களம்

# இன்றே செய்வோம்

பகைமையும் குரோதமும் நிறைந்த நாட்டில்
மனிதமும் நேயமும் நிலை பெறவே
செய்கையில் வேண்டும் ஒரு திருத்தம்
நம் மனதிலே வேண்டாம் தடுமாற்றம்

ஒற்றுமை என்றே ஓலம் இட்டால்
ஒன்றுமே உறைக்காது ஊன நெஞ்சில்
சத்தியம் சிறையிலே கறைபட்ட போதும்
சகிப்பினைக் காப்பதில் அர்த்தம் இல்லை

ஏட்டுக் கல்வியினால் எழுச்சியில்லை இனி
தொழில்முறைக் கல்வியைத் தொடரச்
செய்வோம்
ஒப்பித்தற் கல்விக்கு விடை கொடுப்போம்
உடன் தொழிற்பாட்டுக் கல்விக்கு வழிசெய்வோம்

பிச்சை எடுக்கும் பிழைப்பை ஒழிப்போம்
உழைத்து வாழும் கொள்கை செய்வோம்
சோர்வின்றி உழைத்து உயர்வு பெறுவோம்
சொந்தக் காலில் நிற்கத் துணிவு பெறுவோம்

சரண்ஜா ஜெயராக்
தி/ உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி

*****************************

# தமிழ் மொழி

தமிழ் மொழியே உன்னைத்
தாயென்று போற்றுகிறோம்
உனக்குள்ளே உருவாகி
உன் ரத்தம் பாலாகி
உயிர் பெற்று வந்தோமே நாம்!

மலரோடு மணம் வீச
மயிலோடு இசைந்தாடி - எம்
மனதெங்கும் நிறைந்து
நிற்கும் மெய்த்தமிழ் மொழியே!

பலரோடு உரையாடி
பலர் நெஞ்சில் உறவாடி
பல கழகத்தில் சேர்ந்தாடி நின்ற
எம் தமிழ் மொழியே - உன்னை
வாழ்த்துகிறோம் நாமே!

எம். ரொக்ஷா
தி/அக் – பதாவூர்மகாவித்தியாலயம்.
நிலாவெளி

## தெருக்குரல்

விறகுக் கட்டையில் அக்கினிச் சக்தி
இருந்தது.
நெருப்பாக எரியும் போதே தெரிந்தது.
****
நிறைவுள்ள மனிதர்களாக எல்லோரும்
தங்களை
நினைப்பதுவே பிரச்சினைகளுக்கு கால்.
****
அலையும் மனதை அடக்கவேண்டுமானால்
அதை
அறிய முற்பட்டால் அடங்கும்.
****
பூட்டுகள் யாவுக்கும் சாவியுண்டு,
பிரச்சினையை
கண்டறிந்தால் பூட்டைத் திறந்து விடலாம்.
****
கட்டழகு குலைந்துவிடும் மகப்பேற்றோடு எனின்
கட்டியிருக்க மாட்டான் தாலியை.

**-சூசைஎட்வேட் -**
**அன்புவழிபுரம்**

**********

## *வாழ்க்கை வெறுத்துப் போனது*

வாழ்க்கை வெறுத்துப் போனது
மனிதர்கள் பொல்லாதவர்கள்
பொய் முகம் தரித்து
போலியாய் சிரித்து
குழிபறிக்கும் எத்தர்கள்
மனித நேயம் செத்து விட்டது
மற்றவரின் துன்பத்தில் இன்பம் கண்டு
ஆத்ம சுகம் காணும்
அற்பர்கள்
கொடுப்பதற்கும் ஒரு மனம் வேண்டும்
தடுப்பதற்கும் ஒரு மனம் வேண்டும்
நிவாரணங்கள் எனும் பெயரில்
நீதிக்கு சாவுமணி
நிவாரணத்திற்காய் நீதிமானும்
நீசனாகிப் போனான்
வாழ்க்கை வெறுத்துப் போனது
சாவை வரவேற்பதே மகிழ்வாகிறது.

**ச. மணிசேகரன்.**
**ஆரையம்பதி**



**'நீங்களும் எழுதலாம்' இதழாண்டு மூன்று நிறைவினை முன்னிட்டு திருகோணமலை மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய கவிதைப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள் சில.**

## எத்தனை நாள் துயின்றிருப்பாய்
## என்னருமைத் தாய்நாடே

இந்தியக் கண்ணின் நீர்த் துளியாய்
பாரில் அறிமுகமான புள்ளியே!
கோளமான பாரிலே
அலங்கோலமாக இருப்பதேனோ?

நீ மகவேற்கப்பட்ட ஏதிலியா? - இல்லை
கனவு கண்ட ஊமையா?
கற்பனையை வெளிவிடாது
வையகத்தில் வாழ்கிறாய்

தலைகுனியா தமிழனுண்டு – உன்னிடம்
தாழ்வு பெறா முஸ்லீமுமுண்டு
சங்கையான சிங்களவரும்
பண்பான பறங்கியருமுண்டு - இருந்தும்

சலிப்பதேனோ? வாழ்வில் திகைப்பதேனோ?
(சு)தந்திரத்தின் சின்னமாய் திகழும்
அரசியலா உன்னை
வளர வளர வெட்டுகிறது?

அட அதைவிடு
பாம்பின் இயல்பு கொத்தும்
மாற்றியமைக்க முடியுமா?
அது அவரியல்பு.
கண் திறந்து முன்னேறு

இந்து சமுத்திரத்தில் குளித்துக் கொண்டே
உறங்குகிறாயே!
உறக்கத்தை கைவிடு விழித்தெழு
வெட்டிய அரும்பாய் வளரு.

மேல்நாட்டுத் தந்திரத்தை தகர்த்தெறி
உனக்கு இனிவேண்டும் வெறி
முன்னேற்றமே இனி உன் குறி
கல்வியால் முன்னேறத்துடி!

உன்னிடம் உண்டு கல்விச்சிறகு
பறக்கவில்லை
உன்னிடம் உண்டு ஆளுமைத்துடுப்பு
வலிக்கவில்லை – ஏன்
நீ இன்றும் விழிக்கவில்லை.

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்
அருமைத் தாய் நாடே
ஆசியாவின் அச்சமில்லை
ஆச்சரியமெனக் கிளம்பு!

இளைஞர் துணையை கையிலெடு
கற்றோர் உண்டு – நல்ல
பெற்றோர் உண்டு எதிர்கால முத்தைப்பெற
இப்பவே பயிரிடு

பெருமையை உனக்கு சேர்
வெற்றியை கையோடு கோர் - உன்
வெற்றிக்கு வேண்டுமடா
ஒற்றுமையெனும் வேர்

விழித்துள்ள உன்னை
முன்னேற்றி அகிலத்தில்
இலங்கை என உலகுக்கு
அறிமுகம் செய் !

**செல்வன் சவர்தீன் முஹம்மது இர்பான்**
**தி/கோணேஸ்வரா இந்துக் கல்லூரி**

****************************

## புதியதோர் உலகம் செய்வோம்

இறுக்கமான இரும்பு நகப் பிடிகளால்
நாட்கள் திறக்கப்படுகின்றன!
மூடப்படுகின்றன!
வைரம் பாய்ந்த குரங்குப் பிடிகளால்
விலை மதிக்க முடியாத வைரங்கள்
காவு கொள்ளப்படுகின்றன!
நிரந்தரமான இருட்டறை..........!
எந்திரமயமான வாழ்க்கை...........!
அந்தரத்தில் தொங்கும் திரிசங்குபோல்
வாழ்வதற்காகப் பிறந்தவர்கள் மத்தியில்
பிறந்ததற்காக வாழும் மனங்கள்............!



அவர்களின்
ஊமை கானங்கள் -
ஆமை வேகத்தில் காற்றோடு
காற்றாகின்றன........!
தமிழ்ச் சொல் தரித்த ஓலைச் சுவடிகள்.
சொல் அரித்த ஆலைப் படிவுகளாய்......!

மாறுதல் இந்த ஜகத்தின் முதல் விதி!
ஆம் மாற்றமே மௌனித்து விட்டதா

இல்லை....... இல்லை........!
மாற்றத்திற்குப் புதிய தோற்றம் கொடுப்போம்
காற்றினும் கடிதாய் களைந்தெறிவோம்!
அடிமை விலங்குகளையும்..........!
மிடிமைப் பட்டுக்களையும்.......!

காட்டுக் குயிலின் இனிய கானம் முதல்,
நாட்டுக் கூத்துப் பட்டறை ஈறாக புதிய
பாட்டுக்கொரு புலவன் பாரதியின் படையிலே
வீட்டுக்கொரு கவிதை கொண்ட
தமிழ் உலகம் செய்வோம்!
மழையிலே நனைய மறுத்து
இனம் என்னும் கடலினிலே
ரத்தத்தால் முக்குளித்தவர்கள்
பித்தம் கொண்டு அலைந்த வரலாறுகளை
அப்புதிய உலகம் விலக்கட்டும்
தமிழன் என்று சொல்லுவோம்!
அதைத் தலை நிமிர்ந்து சொல்லுவோம்!
அம் மாறிய ஜகத்தினிலே!
அடிமைச் சாசனங்கள் இல்லாப்
பத்திரங்களை ஆலவட்டமாய்
விடுதலைச் சித்திரங்களை
வெண்குடையாய் கொண்டு
நான்முகனாய்ப் படைத்திடுவோம்
நான்கு புருடார்த்தங்களை!

சுதந்திரக் கொடி உயர்ந்திருக்க
விடுதலைச் செடி படர்ந்திருக்க

வெற்றிப் படிகள் தொடர்ந்திருக்க
விடிவெள்ளியாய் முளைக்கட்டும்
அத் திரு உலகம்
நாளைய பொழுதினிலே!

**செல்வன் ஜனகன் சாரங்கன்**
**தி/கோணேஸ்வரா இந்துக் கல்லூரி**

## *எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே*

பிரபஞ்சம் எனும் மாநதியில்
பிரவாகம் எடுத்து
சிறு நதியாய்
சீரிய பால் வீதியில் - சிதறி
ஒழுங்கு பிரவகித்தோர்
வையமாய் - வளர்ந்து
மானிடம் வசிக்கும் மரகதமாய்
ஜொலித்த வையமே

நீ தந்த பிச்சையில் ஒரு பருக்கையே
இம் மனிதன்
இதை உணராது அவனோ
உன்னையே தனது என்றான்
அவ்வாறு சொந்தங்கூறி
அவன் செய்த
அக்கிரமங்கள் கொஞ்சமா நஞ்சமா?

பரந்து விரிந்த உயிரினத்தின்
ஓரங்கமான நீ
உன் இனத்துடன் கூட
ஒற்றுமையாய் இல்லையே
அது ஏனோ?
ஒருமுறை உன்னை நீ
கேட்டுப்பார் மானிடா



அணுவில் கருதோன்றி
கருவில் உயிர் தோன்றி
கால ஊற்றில்
பரிணமித்த மனிதனே
உன்னில் என்னடா பேதம்?

நிலம் என்கிறாயா
நிறம் என்கிறாயா
மூடனே?
ஒட்டுமொத்த உன் ஆட்டம்

ஒரு சிலநொடியில்
ஓய்ந்துவிடும் என்பதை என்றாவது
நீ எண்ணியிருக்கிறாயா?

உனதென்றாய் எனதென்றாய்
இனவாதம் என்றாய்
என்றாவது இலங்கை என்றாயா?
உன் வெறியால் உன் தாயையே
ஆம்! உன்நாட்டைத்தான்
சொல்கிறேன்.
உன் தாய் மண்ணையே
உடல் தளர்ந்து உணர்விழந்து
கண்ணயரச் செய்தாயே

சிந்தித்துப்பார் சில நொடிகள்!
நீ தான் மொழி புனைந்தாய்
மொழியில் பல வகை புனைந்தாய்
ஆனால் இன்றோ
வேறு மொழி பேசுகின்றான் என்று
வெறுக்கிறாயே?
வேதனையான நிலையன்றோ இது
சமாதான சகோதரத்தை உன்னகத்தே
வளர்த்துப்பார்
ஓடுகிற செந்நீரும் ஒழுகுகின்ற
கண்ணீரும்
ஒன்றென எண்ணிப்பார்
அப்போ நம் தாய்
கண்ணகல் ஞானம் களிகூர
கண்விளிப்பாள்.

தயங்காதே இப்போதே அவளை
தட்டியெழுப்பு
அவள் உனதல்ல எனதல்ல
நம் எல்லோரையுமெ
மன்னித்து
மகவாய் ஏற்பாள்.

செல்வன் தியாகராஜா நிரோஷன்
தி/கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

*****************************

## பாரினிலே பெண்கள் நடத்த வந்தோம்

பெண்ணே!
நீ இன்னும் அடிமையெனும்
பூட்டுக்குள்தான் இருக்கிறாய்
அவ் அடிமையெனும் பூட்டை
உடைத்தெறிந்து விட்டு
பாரதியின் புதுமைப் பெண்ணாய்
மாறிவிடு....
உன்னால் எல்லாம் சாதிக்க
முடியுமென
வீறுகொண்டு துணிந்தெழு
பெண்ணே! துணிந்தெழு

சுதந்திரத்தோடு வாழ்கவென்றான்
பாரதி.....
அதை இன்று நீ செய்வாய்
பெண்ணே
பாரதியின் கனவை நனவாக்க
எழுந்திடு புதுமைப் பெண்ணாய்
இப்பாரினிலே.....

மாதராய் பிறப்பதற்கு இப் பூமியிலே...
மாதவம் செய்திடல் வேண்டுமடா
என்றான் கவிமணி
நாம் எழுவோம்
பாரினில் பெண்கள் நடத்த
வந்தோமென....



பெண்ணே சற்று சிந்தித்துப்பார்...

எமக்கு சமையல் கட்டுத்தான்
உலகமல்ல...
அதற்கு வெளியேயும் இன்னுமொரு
உலகம் இருக்கிறது என
எத்தனையோ மங்கையர்கள்
எடுத்துக் காட்டியுள்ளனர்....
பாரதியின் புதுமைப் பெண்களாய்
வீரத்திலே ஜான்சிராணியும்
ஈரத்திலே அன்னை தெரேசாவும்
அரசியலிலே ஸ்ரீமாவும்
விண்வெளி சாதனையிலே
கல்ப்பனா சாவ்லாவும்
இப்பாரினிலே பிறந்து
புதுமைப் பெண்களாய் வாழ்ந்தனர்
இவர்களும் பெண்கள் தானே......

விதைகளுக்குள்தான் விருட்சங்கள்
தாங்கும் பெண்ணே
நீ விருட்சமாய் உயர்ந்திடு
இப்பாரினிலே
இவர்களைப் போல் நீயும்
சாதனைப் பெண்ணாய்
எழுந்திடு!.............

மானிடா பெண்களே
இப்பூமியை நடத்துவோம்
அதை நீயே அறிவாய்.....
பெண்ணே
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
என முழக்கமிடு
நாமே சாதனைப் பெண்களாய்
வீறு கொண்டு எழுந்திடுவோம்
இப் பாரினிலே......
இப் பூமியை நாமே தலைமை தாங்கி
நடத்திடுவோம்
புதியதொரு உலகை உருவாக்குவோம்.....
பெண்மையே புனிதப்படுத்வோம்.

செல்வி. ஆன்கியூரின் ஞானப்பிரகாசம்
தி/சென்மேரிஸ் கல்லூரி

## எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே?

வதம் செய்ய வந்தே
உனைப் பற்றும்
விதம் தெரியாது விழித்தார்கள்
நிதம் இங்கே உனைப் பலரும்
பதம் பார்க்க வந்து
பின் இடந்தெரியாதானார்கள்

கரம் நீட்டி உன்னிடத்தே
வரம் கேட்கும்
கைகேயிகளும் உள.
நிறம் மாற வைத்து — உன்னில்
அறம் மாற வைக்கும்
துரியோதனர்கள் சிலர்.

சோலைகள் அழித்து உன்னைப்
பாலையாய் ஆக்கக் கனாக்கண்டு
மாலைகள் அறுத்து — உந்தன்
சேலையைக் கரம் பற்றும்
துச்சாதனரும் உளர்

துண்டங்கள் ஆக்கி உனை விலைப்
பண்டமாய் ஆக்க எண்ணிடுவோர்
கண்டத்தை யறுத்து — அவரை
முண்டமாய் ஆக்கிடாயோ?

அலை மோதும் உனதழகை
விலை பேசும் பாதகரை
நிலை குலையச் செய்தே — அவர்
தலை கொய்ய மாட்டாயோ?

நீதிகள் அழித்து உன்னில்
விதி என்றே சொல்லி நிதம்
சதி செய்வோரைத் தினம்
கதிகலங்கச் செய்வாயோ?

விழுந்து பல தடைவை
அழுந்திக் கிடந்தே உன்னில்
தாண்டிடும் நிலையில் எனக்கு
வேண்டிய பொருள் தந்து
நீண்டிடும் உனதழகை — கவிபுனைய
தூண்டியவள் நீயல்லவா?



மீன் குதிக்கும் உந்தன் கடல்
தேன் கொழிக்கும் உந்தன் உடல்
வான் செழிப்பாய் உனக்கிருந்தும்
ஏன் உனக்கு இந்த நிலை?

இத்தனை நாள் பொறுத்திருந்தாய்
அத்தனையும் போதும் இனி
இத்தனையும் நடந்த பின்னும்
எத்தனை நாள் துயின்றிருப்பாய்
என்னருமைத் தாய் நாடே?

**- பெ.பத்மபிரஷன் -**
**திருகோணேஸ்வரா இந்துக் கல்லூரி-**

********************

## நிசப்தம்

மறைவுகளின் பின் தோன்றும்
ஊமைக் கால்கள்
நிர்வாண உருவங்கள்
மதில்களில் தொங்கும் உள்ளாடைகள்
ஆளில்லாத வீடுகள் என
இந்த பேரமைதி ஓடிக்கொண்டிருக்கிறது.

நிராதரவாக தெரிகின்ற முகங்கள்
அவற்றுக்கு விலைபேசும் கைகள்
அவற்றை உட்பதிக்க முற்படும் ஊனங்கள்
எல்லாம் பரிணாமத்தை எச்சரிக்கவே
செய்கின்றன.
மறைந்த கால்களோடு ஒன்றிய
பேரமைதியோடு ......................

**தில்லைநாதன் பவித்ரன்**
**திருகோணமலை**

அழகுற அச்சிட்டு வழங்கிய அஸ்ரா பதிப்பகத்தினருக்கு மனமார்ந்த நன்றிகள்

கருத்தாடற்களம்

## கவிதை என்பது............?

-தாமரைத்தீவான்-

"கவிதை – கவிதை" என்கிறார்கள். அப்படி ஒரு தமிழ்ச் சொல் இருந்ததாகத் தெரியவில்லை. பா – பாட்டு – பாடல் - யாப்பு - செய்யுள் - தூக்கு – பனுவல் - தொடர்பு என்பன இருந்ததுண்டு. நாற்கவி என்பார் குருபரர். கவி என்றால் குரங்கும் ஆகும். கவியால் கடல் அடைத்தோன்" என்பார், அருணகிரி. கவிஞனைப் புலவன் என்றே முன்னம் சொன்னார். கவிராயர் என்றார் காளமேகம்.

எல்லாவற்றுக்கும் வரைவிலக்கணம் உண்டு. கவிதைக்கு இதுவரையில் இல்லை. ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாய் உரைத்தனர். 'ஆர்வத்தீயால் அன்புள்ளுருகி அருவிபோல வருவது பாட்டாம். என்றார் சுத்தானந்தர். . உள்ளத்துள்ளது கவிதை, உணர்ச்சி உருவெடுப்பது கவிதை. தெள்ளத் தெளிந்த தமிழில் அதனைத் தீட்டி விடுப்பது கவிதை' என்றார் தேசிய விநாயகம். "சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது சொற் புதிது" என்றார் பாரதியார் ........'இளமைக் கயிற்றில் கனவைத் தொடுத்தல் கவியாகும்' என்றார் நீலாவணன். 'சொல்லடுக்கிச் சொல்லடுக்கிச் சோடித்த கவிதையெலாம் போதும்' என்றார் காசியார். 'கடவுளுக்கு அடிமுடி கிடையாது – கவிதையும் அப்படியே' என்றார் வேலனார். 'உப்புக்கும் பாடிப் புளிக்கும் ஒரு கவிதை ஒப்பிக்கும் உன்றன் உளம்' என்றார் அவ்வையார். 'வெறுமனே கருத்தை உரைத்தல் கவியாகா' என்றார் அப்துல் றகுமான். 'எளிமையின் இயல்பாயமைந்த வாழ்வனுபவக்கீற்றுக் குடிசையே கவிதை' என்றார் வயிரமுத்து. "சோலை கடல் மறந்து, ஏழை உழைப்பு எனப்பாடுங்கள்' என்றார் மகாகவி. நடந்தால் வசனம் - பாய்ந்தால் கவிதை என்பார் புதுக்கவிஞர். எனவே எது கவிதை? நாம் தான் வரைவு செய்ய வேண்டும். யாப்புக்கேற்பச் செய்யப்படுவது செய்யுள். இசையோடு பாடக்கூடியது பாட்டு. உணர்ச்சி – சொல்லாட்சி – கற்பனையுடன் உவமை – படிமம் - குறியீடு போன்ற கவித்துவங்களும் கொண்டதே



கவிதையாம். "ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ? எனும் அவ்வைபாடல் செய்யுள். 'தமிழ்த் திருநாடு தனைப் பெற்ற – எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா" எனும் பாரதி பாடல் பாட்டு. "பாற்புகை முகிலைச் சீய்த்துப் பளிச்சென்று திங்கட்சேவல் / நாற்றிக்கும் குரல் எடுத்து நல்லொளி பாய்ச்சிப்பெட்டை / ஏற்பாட்டுக்கடங்காப் பொட்டுப் பொடி விண்மீன் குஞ்சுகட்கும் / மேற்பார்வை செலுத்திப் பூனை இருபட்டையும் வெளுத்துத்தள்ளும்", எனும் பாவேந்தரின் பா கவிதையேதான்.

நீங்களும் எழுதலாம் - ஆண்டு மூன்று நிறைவின் 'கவிதை + கவிஞ' னில் : 'எல்லாம் சுட்டபின்பு இறக்கின்றன. நீ மட்டும் சுட்ட பின்பே பிறக்கின்றாய்!' எனும் செங்கல் கவிதை கவிதையல்ல – விடுகதையே. சுட்டபின் பிறக்கும் கல் எது? எனக் கேட்டபின் செங்கல் பதில் வரும் என்கிறார். 'எது கவிதை? யில் மு.பொ.அவர்கள், 'எத்தூய கோயிலுள்ளும் தூசுநுழையும், உள்ளொளியும் தீபம் பேசாது – அதன் ஒளிர்வில் தூசே ஒளிர்ந்து பேசும்' எனப் 'பேசாது' தலைப்பில் ஒரு கவிதையையும் காட்டுகிறார்.

ஆசிரியப்பா – வெண்பா – கலிப்பா – வஞ்சிப்பாவான நாற்பா, மருட்பாவோடு ஐம்பாவாகி, நாற்பா (நன்னூல்) வோடு ஆறாகி, புதுக்கவியோடு ஏழாகி, கைக்கூவோடு எட்டாகிப் பரந்து பட்டு விரிந்து வளர்ந்து போய்க் கொண்டிருக்கிறது. தன் செய்யுளை அவ்வையார் கவிதை எனச் சொன்னாலும் 'பாட்டும் உரையும் பயிலாதன விரண் டோட்டைச்செவியும் உள' எனப் பாட்டென்றே செல்கிறார். எனது ஆசையெல்லாம் : ஒரு புலவன் இந்தப்பிறமொழிச் சொற்களையெல்லாம் நீக்கித் தனித் தமிழால் ஒரு பாட்டை எழுதிக்காட்டமாட்டானா? என்பதே தான். இல்லையென்றால், எதையும் முழுமையாகச் சொல்ல முடியாத – கையாலாகாத – பெரியாரின் கூற்றுப்படி ஒரு காட்டு மிராண்டி மொழியே நமது தமிழ் என்பதை வெட்கமின்றி ஒத்துக்கொண்டே ஆக வேண்டும். நல்ல காலம், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மறைந்து விட்டார். இல்லாவிடில்.............?

# 'மேமன்கவி' யின் ஒரு வாசகனின் பிரதிகள்



"இன்றைய யுகத்தில் கலை இலக்கியப் பிரதிகளை வாசிக்கும் முறைமையானது இதுவரை காலமும் கொண்டிருந்த ஒற்றைத் தன்மையிலிருந்து மீட்டெடுக்கப்பட்டு, ஒரு பிரதியானது பன்முக வாசிப்புக்கு ஆட்படும் என்ற சிந்தனைகள் தமிழ்ச் சமூகச் சூழலிலே நிலவுவதற்கு முன்னதான காலகட்டத்தில் எழுத வந்தவன் நான்" எனக் குறிப்பிடும் ஆசிரியர்

- உள்ளும் புறமும் சிறுகதைத் தொகுதி – க.நவம்
- கலை இலக்கிய வளர்ச்சியில் கணினியும் இணையமும்
- ஈழத்துப் பெண்ணியக் கவிதைகள்
- அ.ந.கந்தசாமி
- எம்.எஸ்.அமானுல்லாவின் கதைகள்
- பின் காலனியம் கோட்பாடும் இலக்கியமும்
- பெண்ணியக்கவிதை வளர்ச்சி
- தமிழ் நேசன் அடிகளாரின் 'நெருடல்கள்'
- மலராவின் 'புதிய இலைகளால் ஆதல்'
- பின் காலனிய குறுந்திரைப்படம் பரிவர்த்தனை
- கெகிராவ ஸலை லாவின் பட்டுப்பூச்சியின் பின்னுகை போலும்'
- 'வர்ணங்களின் கலவைகளினூடாக ஓர் அனுபவம்

கௌசிகனின் மாணவிகளின் ஓவியக் கண்காட்சி என நூலில் தனது பார்வைகளைப் பதிவு செய்துள்ளார்.

"எண்மப் புரட்சியின் சாதகமான விளைவுகளைக் கலை இலக்கியப் பரப்புக்குள் இழுத்துவரும் முயற்சியைத் தமிழிலே தளராது முன்னெடுத்து வருபவர்களுள் மேமன்கவி தனித்துவ மானவர்" என நூலின் நுழைவாயிலில் பேராசிரியர் சபா. ஜெயராசா குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.



மேமன்கவியின் பார்வைகள் விரிந்து பரந்துபட்டு மொழிக்கும் சமூகத்துக்கும் பயன்பாடுடையதாக அமைய வாழ்த்துக்கள்

வெளியீடு எஸ்.கொடகே சகோதரர்கள்
விலை : 350/=


*****************************

நூல் : ஈழத்து கலை இலக்கிய உலகு

(விமர்சனக் கட்டுரைகள்)

ஆசிரியர்:-

கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்



கவிதை விமர்சனங்கள், நாடகவிமர்சனங்கள், மரபு இலக்கியம், கல்வியியல், மொழியியல், இசையியல் சார்ந்த விமர்சனங்கள், ஆங்கிலத்திலான இலக்கியம் சார்ந்த விமர்சனங்கள், பின்னிணைப்பாக எதிர்வாதங்களை உள்ளடக்கி 42 கட்டுரைகளைத் தாங்கி வெளி வந்திருக்கிறது. ஈழத்து கலை இலக்கிய உலகு'

"ஈழத்திலே வெளிவருகின்ற கட்டுரை, விமர்சனம் ஆய்வு நூல்களுள் கணிசமானவை குறிப்பிடத்தக்க தலைப்பில் திட்டமிடப்பட்டு எழுதப்படாமல், அவ்வப்போது எழுதப்பட்டவற்றின் தொகுப்புகளாகவிருப்பது கண்கூடு. இத்தகைய கட்டுரைகள் பலவும் கற்பித்தல் அனுபவத்தின் அறுவடைகளாக இருக்கும் ஒரு துறை தழுவியனவாகக் காணப்படும், மாறாக இந்நூலிலுள்ளவை ஒரு துறை

சார்ந்தனவல்ல, கற்பித்தல் அனுபவத்திற்குட்பட்டனவுமல்ல. நூலாசிரியரின் ஈடுபாடு காரணமாகவும், இடைவிடாத தேடல் காரணமாகவும் உருவானவை. அது மட்டுமன்றி ஒன்றுடன் ஒன்று தொடர்புபடாத கவிதை, நாடகம், ஆங்கிலமொழி பெயர்ப்பு, நூல்விமர்சனம் ஆகிய துறைகள் சார்ந்தனவாகவுள்ளன. ஆதலின் அவ்வாறான வித்தியாசமான புலமைக்கலவை இலக்கிய ஆர்வலருக்கும் நல்விருந்தாகக் கூடியன என்பதில் ஐயமில்லை" என பேராசிரியர் செ.யோகராசா அணிந்துரையில் குறிப்பிடுவது அவதானத்துக்குரியது. எஸ்.கருணாகரனின் கவிதைகள், சு.வி.யின் காலத்துயரும் மு.பொ.வின் கேள்விகளும் சில பதில் குறிப்புகளும், கவிஞர் சிவசேகரம் காட்டும் போரின் முகங்கள்........... எனத் தொடர்கின்ற இவ்வாறான விமர்சனங்கள் ஈழத்து இலக்கிய உலகினை ஆரோக்கியமான நிலைமைக்கு இட்டுச்செல்ல பெரும்பங்காற்றும் எனத் துணிந்துகூறலாம்.

**வெளியீடு : வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்**


**விலை 400/=**

புனைபெயரில் எழுதுவோர் தமது சொந்தப் பெயர், முகவரியையும் குறிப்பிடுதல் வேண்டும்.



# தமிழ்ச் சிந்திதழ்கள்

## *சேகரிப்பாளர் க. பட்டாபிராமன்*



பொறியியலாளரான க.பட்டபிராமன் தமிழக அரசு பொதுநல பணித்துறையில் 42 ஆண்டுகள் பணிபுரிந்தவர். உலகளாவிய ரீதியில் வெளி வந்து கொண்டிருக்கும் தமிழ்ச் சிற்றிதழ்களை 1958 இலிருந்து சேகரித்து வருபவர். இதுவரை 6500க்கு மேற்பட்ட தமிழ்ப்பத்திரிகைகள், இதழ்களைச் சேகரித்துச் சாதனை படைத்துள்ளார்.

அண்ணா பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த போது 1965ம் ஆண்டு முதன் முதலாக 600 இதழ்களைக் கொண்ட தமிழ்ப் பத்திரிகைக் கண்காட்சியை நிகழ்த்தினார். பின்னர் 1975,1976,1977,1981 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து கண்காட்சிகளை நிகழ்த்தினார்.

இறுதியாக 2007 இல் 6000 இற்கும் மேற்பட்ட தமிழ் இதழ்களைக் கொண்ட கண்காட்சியை திருச்சியமால் முஹம்மது கல்லூரியில் நடத்திக் காட்டி அனைவரது பாராட்டையும் பெற்றார்.

தொடர்பு :

53 – 2 பன்னீர்ச் செல்வம் தெரு, மார்க்கட்ரோடு சுப்பிரமணியம், திருச்சிராப்பள்ளி 620020 தமிழ்நாடு, இந்தியா, தொலைபேசி 0431 – 233113, 9994153045

மின்னஞ்சல் - tamillithazkal@ymail.com

# குருவிக்கூடு

என் வீட்டு முற்றத்தில், செழித்து
முகம் மலர்ந்து நிற்கும்,
அந்த மாதுளை மரத்தில்,
சின்னக் குருவிகள் இரண்டு
ஒவ்வொரு நாளும், விடியலில் வந்து,
விளையாடிக் களிக்கும் - குருவிகளின்
குதூகலத்தைப் பார்த்துப் பார்த்து,
என்னுள்ளம் பூரிக்கும்.
கால ஓட்டத்தில், மாதுளைக் கந்தில்
சின்னக் கூடொன்று சிரித்தது.
படுக்கைக்கு பஞ்சு வைத்து,
பக்குவமாகக் கட்டப்பட்ட கூடு,
இல்வாழ்வின் ஆரம்பமோ?
நாட்கள் நகர, சின்னக்
குருவிகளின் குலம் தழைக்க,
கூட்டினுள்ளே, குஞ்சுகள் கத்தின.
கத்தின குஞ்சுகளை, கூட்டில்
கவனமாய் வாழ வைக்க,
அல்லும் பகலும் ஆவலுடன் பாதுகாத்தேன்.
உயிர்களை நேசிக்கும்
உயர்பண்பை மதித்து வந்தேன்.
காலம் உருள,
கத்திய குஞ்சுகள் அத்தனையும்
கூட்டைப் பிரிந்து, பறந்து விட்டன.
சின்னக்கூடு, கவனிப்பாரற்று,
அநாதையாகக் கிடக்கிறது.
மீண்டும், மாதுளை மரத்தில்
தினமும் விடியலில்
வண்ணக் குருவிகள் வந்து,
காதலில் கட்டுண்டு களித்துக் கிடக்கும்.
வாழ்வின் தத்துவம் - உலகில்
தொடர்வதைப் பார்த்து - மாதுளை மரத்தில்
பூத்துக் குலுங்கும் - சிவந்த
பூக்கள் பார்த்து சிரித்து மகிழும்.

-- தம்பி இஸ்மாயில் லெவ்வை



நூல் - கருத்துக்கலசம்
ஆசிரியர் - சூசை எட்வேட்
வெளியீடு : அகிலஇலங்கை இளங்கோ கழகம்
தொடர்பு : 1004 . அன்புவழிபுரம்
திருகோணமலை
விலை : 150/=

அவதானம் நிதானம் மனிதாபிமானம்
பிரதானமானால்
அவமானம் ஒருநாளும் இல

xxx xxx

கட்டிய மனைவியிடம் நற்சான்று பெற்ற
கெட்டிக்கார மேதை எங்குமில



இவ்வாறு ஈரடிகளில் கருத்துக்களை நறுக்காகக் தரும் சூசை எட்வேட் பற்றி முன்னுரையில் பெரியஜங்கரன் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.
"ஆன்மீகம் , அரசியல் , குடும்பம், காதல் , கல்வி , வறுமை , பெண்மை, அறம் என பல்துறை சாரந்து சூசைஎட்வெட் எழுதியுள்ளார். நாளாந்த செய்திகளை நகைச்சுவையோடு படம் பிடித்திருக்கிறார். தனது அனுபவங்களையும் கருத்துக்களையும் மொழிவதற்கு அவர் எடுத்துக்கொண்ட இரண்டடி உத்தி வரவேற்கத்தக்கது."


ஆசிரியர் தன்னுரையில் "உலகம் என்ற அனுபவப் பார்வையில் வாழ்க்கை எனும் பாடத்தை நாம் எல்லோரும் கற்றுக் கொண்டிருக்கிறோம்........................."
படைப்பாளி மனிதனிடமிருந்து பெற்றதை மீண்டும் மனிதனுக்கு அளிக்கிறான். எனக் குறிப்பிடுகிறார்.
மேலும் " நீங்களும் எழுதலாம்" கவிதைச் சிற்றேட்டின் ஆசிரியரே முதன்முதலாக எனது ஆக்கத்தைப் பிரசுரித்து என்னை இலக்கிய உலகுக்கு அறிமுகஞ் செய்து வைத்தவர். எனக்கு இலக்கிய அந்தஸ்தைத் தேடித்தந்தவர்". எனக் குறிப்பிடுகிறார்."

1030 நறுக்குகளைக் கொண்ட "கருத்துக்கலசம்" சுவைத்துப் படிக்கத்தக்கது. தற்சமயம் சிறுகதைத் துறையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் ஆசிரியரின் படைப்புலகம் விரிவடைய வாழ்த்துக்கள்.

---

கிடைக்கப்பெற்றோம்

1



2




**நெருங்கின பொருள்**
**கைப்பட வேண்டும்**

இளைஞர் நாவல்

ஆசிரியர் . ச. அருளானந்தம்

வெளியீடு : அருள் வெளியீட்டகம்,
37/7, மத்திய வீதி, உவர்மலை,
திருகோணமலை.

விலை : 200/-

**சொந்தங்கள்**

சிறுகதைகள்

ஆசிரியர் : த. சிவசுப்பிரமணியம்
(தம்பு - சிவா)

வெளியீடு :
நியூசெஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட்

இந்திய விலை : 80/-



# அடக்கம்

*அனைத்தும் அடக்கம்*
*இவர்கள்*
*வித்துவப் பிடிக்குள்!*

*எழுச்சியும் : வீழ்ச்சியும்*
*ஆக்கமும் : அழிவும்*
*வெற்றியும் : தோல்வியும்*

*எவையுமே*
*விலையில்லாதன*
*இவர்கள் பார்வையில்*
*எல்லாமே*
*இரசனைக்குரியன!*

*சிறுமயிரைத் தானும்*
*உசுப்பாமல்*
*சிந்திக்கத் தெரிந்தவர்கள்*
*நடந்தவைகட்கு — காலம்*
*கடந்தவைகட்கு*
*விளக்கந்தரு - வல்லுநர்கள்!*

*பாவம்*
*இந்தச் சொல்லெறி மன்னர்கள்*
*தம் மேலவர்களின் - சிறு*
*கண்ணெறிக்குக் கூட*
*கலங்கிப் போபவர்கள்!*
*கடைக்கண்ணிற்காய்*
*காத்துக்கிடப்பவர்கள்!*

*கட்டமைக்கப்பட்ட தடாகத்தில்*
*நீச்சல் அடிக்கும்*
*இவர்களினால்*
*சிறு துரும்பேனும்*
*கரையேறப்போவதில்லை!*


*உண்மையில்*
*இவர்கள் திருப்பார்வை பட்டு*
*எதுவும்*
*உருப்பட்டதாய்*
*ஒரு நாளுமில்லை!*

*பிரேதங்கள் போதும்*
*இவர்களுக்கு*
*தம் இருப்பை நிலை நிறுத்த!*

**- எஸ். ஆர். தனபாலசிங்கம் -**

## வாசகர் வட்ட நிகழ்வு - 01.05.2011

'நீங்களும் எழுதலாம்' வெளியீடான 'கவிதையும் கவிஞனும்' நூல் பற்றிய கலந்துரையாடலில் நந்தினி சேவியர் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.



## வாசகர் வட்ட நிகழ்வு 05.06.2011

இந்நிகழ்வு பாரதியார் பற்றிய கலந்துரையாடலாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக எழுத்தாளர்களான Dr. இராஜ தர்மராஜா, ஆ. அசனார் J.P, ஜெயாதமிழினி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர்.



## வாசகர் கடிதம்

"நீங்களும் எழுதலாம்" என்ற இரு மாத இதழின் விமர்சனக் குறிப்பை தினக்குரல் ஜூலை அறியத்தந்திருந்தது. அதன் இலக்கியக்கனதி தரம்மிக்கது. அதன் வளர்ச்சி இன்னும் பாமர மக்களை அடையவேண்டும். இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்று பேசப்படும் நிலையில் "நீங்களும் எழுதலாம்" ஒரு நல்ல இலக்கியக் குறியீடு. இலக்கியத்துக்கு வடிவங்கள் மட்டும் காத்திரமல்ல. அது மக்களை சென்றடையும் வழிதான் காத்திரமானது. அதை "நீங்களும் எழுதலாம்" கவிதை இதழ் வெல்லும், கவிதைப் பிரியர்களுக்கு புதிய நம்பிக்கையைக் கொண்டு வந்திருக்கிறது நீங்களும் எழுதலாம் வாழ்த்துக்கள்.

- ஆ.வே. கெங்காதரன் - வியாபாரி மூலை

▣▣▣▣▣▣▣▣▣▣▣▣▣▣▣▣▣▣▣▣

வாசகர்களே,

'நீங்களும் எழுதலாம்'இதழின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் உங்களது ஆதரவை எதிர்பார்க்கின்றோம். சந்தாதாரர் ஆவதோடு உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி உதவுங்கள். அன்பளிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

---

**வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்**
**வருட சந்தா 200/=**
R. Thanabalasingam
A/C No : 106653402077
Sampath Bank, Trincomalee.
**என வைப்பிட்டு பற்றுச்சீட்டை அனுப்பி வைக்கவும்**
**வெளிநாடு** US $10

மூலமும் பெயர்ப்பும்

## Exception

*Mureed Barghouti*

All of them arrive

river and train

sound and ship

light and letters

the telegrams of consolation

the invitations to dinner

the diplomatic pouch

the space ship

they all arrive/all but my step toward my own country..

பெயர்ப்பு
சி. சிவசேகரம்



## விலக்கு

*முரீட் BrG"ட்டி*

அவை எல்லாம் வந்தாயிற்று
ஆறும் புகைவண்டியும்
ஒலியும் கப்பலும்
ஒளியும் கடிதங்களும்
ஆறுதல் தந்திகளும்
இராப்போசன அழைப்பிதழ்களும்
அயற்தூதரகப் பையும்
விண்கலமும்
அவை எல்லாம் வந்தாயிற்று / என்
நாட்டை நோக்கிய என்
அடியெடுப்பை விட

ISSN.1800-3311